# ஆண்டவரின் திருமுழுக்கு விழா

## மூன்றாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

மீட்பரை எதிர்நோக்கியிருந்த இஸ்ரயேல் மக்களுக்கு ‘என் அன்பார்ந்த மைந்தர் இவரே’ என்று பரலோக தந்தையால் உணர்த்தப்பட்டு, திருமுழுக்கு யோவானால் திருமுழுக்கு அருளப்பட்ட இயேசுவின் திருமுழுக்கு திருவிழா திருப்பலியை கொண்டாட இன்று அழைக்கப்பட்டுள்ளோம்.

இறைமகனாக இருந்தாலும் இறைப்பணியை தொடங்கும் முன் மனிதரோடு மனிதராக நின்று திருமுழுக்கு பெறுகிறார் இயேசு கிறிஸ்து. தூய ஆவியைப் பெற்று பணி வாழ்வுக்கு தம்மை தயார்படுத்துகிறார். நாமும் நம் வாழ்வின் எண்ணங்களை தூய ஆவியின் துணையோடு செயல்களாக்கும்போது அவை இறைவனுக்கு பிரியமான செயல்களாக இருக்கும். இயேசுவின் திருமுழுக்கு அனுபவத்தை நாமும் பெற்றால்தான் உண்மையையும் நீதியையும் நிலைநாட்டும் பிள்ளைகளாக இவ்வுலகில் நடைபோட முடியும்.

பிற இனத்தாருக்கு ஒளியாகவும், அமைதி ஏற்படுத்துபவராகவும் திகழ்ந்து, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும் வார்த்தைகளை வழங்குகிறது எசாயா இறைவாக்கினரின் வார்த்தைகள். “இதோ தலைவராகிய ஆண்டவர் ஆற்றலோடு வருகிறார், ஆற்றலோடு ஆட்சி புரிய இருக்கிறார்” என்று இயேசுவின் ஆட்சி இறைவாக்கினர் வாயிலாக முன்மொழியப்பட்டுள்ளது. இறைவனின் வருகை அனைத்து ஆசீர்வாதங்களையும் அள்ளித் தரும். கோணலானவை நேராக்கப்பட்டு, அனைவருக்கும் சமமாக பங்கிடப்படும் என்றும் ஆசீர்வாதங்களை பெற்று விட்டோம் என்றும் விசுவசிப்போம்.

“என் அன்பார்ந்த மகன் நீயே” என்று இறைவன் இயேசுவிடம் பூரிப்படைவதையும் தூய ஆவியாரை துணையாளராக அனுப்புவதையும் நற்செய்தி வாசகம் எடுத்துரைக்கிறது.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை

வாய்மையாற் காணப் படும்.

என்பது வள்ளுவர் வாக்கு. உடலை நீரால் தூய்மைப்படுத்தலாம். உண்மையால் மட்டுமே உள்ளத்தை தூய்மைப்படுத்தலாம் என்பது இதன் பொருள். நாமும் தூய உள்ளத்தை பெற்றுக் கொள்ளவும், தூய ஆவியாரை உள்ளத்தில் வரவேற்கவும் நாம் திருமுழுக்குப் பெறுகிறோம். இது வெறும் சம்பிரதாயமாக இன்றி, நம்முள் தூய ஆவியின் கனிகளை பிறப்பிக்கட்டும், இயேசுவின் திருமுழுக்கின் போது நடைபெற்ற இறை விருப்பம் நம் திருமுழுக்கிலும் நடக்கிறது. நாமும் நமது திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்துக் கொள்வோம். நாம் கிறிஸ்துவின் பங்காளிகள் என்பதை உணர்ந்து, அவரைப் போன்று இன்பத்திலும் துன்பத்திலும் தந்தையாம் கடவுளோடு மகிழ்ந்திருப்போம். தூய ஆவியின் துணையோடு செயல்படுவோம் என்ற சிந்தனைகளோடு இப்பலியில் இணைவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. உமது ஊழியர்களாக வாழ அழைப்பவரே!

திரு அவையை வழிநடத்தும் திரு அவைத் தலைவர்கள் பணியாளர்களை, தூய ஆவியால் நிரப்பி, உம் கரத்தால் வழிநடத்தவும், மக்களை இறை பாதையில் வழிநடத்த தேவையான வல்லமையை தந்து காத்து வழிநடத்தும் வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

2. ஆற்றலோடு ஆட்சி புரிய வருபவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள், நீர் மக்களை நேசித்து, அன்புப் பாதையில் வழிநடத்தியது போல, ஆட்சியாளர்களும் பிரிவினை, பிரித்தாளும் போக்கை கைவிட்டு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வளமான வாழ்வை ஏற்படுத்தும் வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

3. தூய ஆவியால் எம்மை நிரப்புபவரே!

திருமுழுக்கின் வழியாக நாங்கள் பெற்றுக் கொண்ட தூய ஆவியை உணர்ந்து, தூய ஆவியின் வல்லமை எங்களில் தொடர்ந்து நிறைவேறவும், தூய ஆவியின் கனிகளை பெற்று நற்செய்தியை வாழ்வாக்கிட வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

4. என் அன்பார்ந்த மகன் இவரே என்று இறைத் தந்தையால் அரவணைக்கப்பட்டவரே!

எமது பிள்ளைகளும் கல்வி, இறை ஞானம், ஒழுக்கத்தில் சிறந்து விளங்கவும், இறைவன் விரும்பும் பாதையில் தூய வாழ்க்கை வாழ்ந்து, பெற்றோர், பெரியோரை மதிக்கவும், கீழ்ப்படிந்தும் சிறந்தவர்களாக வளர வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

5. பள்ளங்கள் எல்லாம் நிரப்பப்படும் என்றவரே எம் இறைவா!

எம் பகுதியில் தகுந்த இயற்கை கால சூழ்நிலை நிலவி, விவசாயம் சிறந்து, பொருளாதாரம் மேம்படவும், குடும்பங்களில் அமைதி, சந்தோசம் பெருகவும், எண்ணங்கள், ஏக்கங்கள் நிறைவேறவும், வேலைவாய்ப்பு, திருமணம் குழந்தை வரம் வேண்டுவோர் உமது அருளால் பெற்று மகிழும் வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com